## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 30/2024** **Date:11.03.2026.**

**(PW1)- முருகானந்தன்**

**4** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. ராஜகோபால் மற்றும் கணேசன் என்பவர்கள் எனது சகோதரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் வடுமன்நாடார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வடுமன்நாடார் 3 குழந்தைகள் என்றால் சரிதான், மேற்படி நபர்களின் பெயர் சுப்பிரமணியன் நாடார், கொடியன் நாடார், அப்பாவு நாடார். மேற்படி சுப்பிரமணியன் நாடார் என்பவருக்கு 3 குழந்தைகள் என்றால் சரிதான். சுப்பிரமணியன் நாடார், கொடியன் நாடார், அப்பாவு நாடார் ஆகியோர்கள் 1108 ME வருடத்தில் பாகப்பிரிவினை செய்துகொண்டனர் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தை நான் வா.சா.ஆ.1 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. மேற்படி ஆவணப்படி சுப்பிரமணியன் நாடாருக்கு வா.சா.ஆ. 1 ஆவணப்படி அ பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அ பட்டிகையில் 7 சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களில் பழைய சர்வே எண் 6408B ல் 5 செண்ட் மற்றும் இரண்டு செண்டில் பொதுவான குடும்பகோவிலும் உள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் ஏ பட்டிகையில் சர்வே எண் 6408B என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் மேற்படி சொத்து 5 செண்ட் மற்றும் இரண்டு செண்டில் பொதுவான குடும்ப கோவிலும் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. அதில் குறிப்பிட்டுள்ள குடும்ப கோவில் தற்போது உள்ளது என்றாலும் வடுவன்நாடார் குடும்பத்தினர் அதில் தற்போதும் வழிபட்டு வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணப்படி இரண்டவாது இன சொத்து பழைய சர்வே எண் 6393 ல் 10.250 செண்ட் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணப்படி 3 வது இன சொத்து பழைய சர்வே எண் 6484 ல் 10 செண்ட் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்கள் மற்றும் அதற்கான விஸ்தீரணம் சரியானது என்றால் சரிதான். சுப்பிரமணியன் நாடார் என்பவரின் வாரிசுகளின் பெயர் வேலயுதாநாடார், முத்துசாமி, மார்தாண்டன் என்றால் சரிதான். நான் மேற்படி முத்துசாமியின் மகன் என்றால் சரிதான். எனக்கு உடன் பிறந்த நபர்கள் எத்தனை பேர் என்றால் 4 சகோதரிகளும், இரண்டு சகோதரர்களும் ஆவர்.

4. எனது சகோதரிகள் இந்த வழக்கில் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி

மார்தாண்டன் என்பவருக்கு தங்கநாடார் என்ற மகன் உண்டு என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகள் மேற்படி தங்கநாடார் என்பவரின் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு எனது வழக்கறிஞருக்கு விபரங்களை யார் தெரிவித்தார் என்றால் நானும் எனது அண்ணன் ராஜகோபால் தெரிவித்தோம். நான் இந்த வழக்கு தாக்கல் சமயத்தில் 3 ஆம் வாதியான கணேசன் வெளிநாட்டில் இருந்தார் என்றால் சரிதான். நான் எனது பிராதில் சுப்பிரமணியனுக்கு பாத்தியப்பட்ட சொத்து வாய்மொழி பாகப்படி யார்யாருக்கு எவ்வளவு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ள விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

5. வேலாயுதபெருமாள் என்பவருக்கு மேற்படி வாய்மொழி பாகப்படி எவ்வளவு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாய்மொழி பாகப்படி யார்யாருக்கு எந்தெந்த சொத்துக்கள் ஒதுக்ககப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை 20.12.1965 ல் நடைபெற்றதால் எனக்கு அது பற்றி விபரங்கள் தெரியவில்லை என்றால் சரிதான். வாய்மொழி பாகப்படி வேலாயுதபெருமாளுக்கு வா.சா.ஆ.1 ஆவணம் 6 வது இன சொத்தில் 15 செண்டும், 5 வது இன சொத்தில் 14.750 செண்டும், முத்துசாமிக்கு 7 வது இன சொத்தில் 10 செண்டும், 1,2 இன சொத்தான சர்வே எண் A1-6/16 ல் 9.250 செண்ட் சொத்தும், 5 வது இன சொத்தில் 10.5 செண்ட் சொத்தும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும் மார்தாண்டனுக்கு 3 வது இன சொத்தில் 10 செண்ட் , 1,2 ம் இன சொத்தில் 8 செண்ட் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது 4 வது இன சொத்தில் 8 செண்ட் சொத்தும் ஒதுக்கப்பட்டுள்ளது. 5 ஆம் இன சொத்தில் 2.5 செண்ட் சொத்தில் 5 செண்ட் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

6. மேற்படி வாய்மொழி பாகப்படி அனைவரும் அவரவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களை கைவசம் வைத்து அனுபவித்து வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட 7 ம் இன சொத்து 3 ம் வாதியான எனது சகோதரர் மேரி என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி கணேசன் மேரிக்கு விலைக்கு கொடுத்த ஆவணம் என்றால் சரிதான், மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி மேரி என்பவர் பெயரில் உள்ள பட்டா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் SLR ன் சான்றொப்ப நகல் என்றாலும் மேற்படி ஆவணத்தில் தாவா சொத்திற்கு மார்தாண்டன் பெயரில் 11.02.1967 பட்டா வழங்கப்பட்டுள்ளது புலப்படுகிறது என்றால் சரிதான் மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. வழக்கு பட்டிகை சொத்தில் கதவு எண் 4/20A1 என்ற வீடு தங்கநாடாருக்கு உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வீடு உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தங்கநாடாருக்கு எந்த சர்வே எண்ணில் வீடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தங்கநாடாரின் வீட்டின் மின் இணைப்பு எண் 07172005176 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மின்சார இணைப்பை துண்டிப்பதற்கு 3 ஆம் பிரதிவாதி மனு கொடுத்து 14.09.2023 ல் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டது என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. மார்தாண்டன் என்பவர் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் 3 ஆம் இன சொத்தை பொறுத்து அவரது பேரபிள்ளைகளான 1, 2 பிரதிவாதிகளுக்கு 08.06.1999 தேதியிட்ட உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் அவ்வாறு சொன்னார்கள்.

8. மேற்படி உயில் ஆவணப்படி 1,2 பிரதிவாதிகளுக்கு சர்வே எண் 491/19 ல் 10 செண்ட் இடம் உரிமை கிடைத்தது என்றால் சரியல்ல, மேற்படி 10 செண்டில் தான் எனது அப்பா அம்மா மற்றும் தாத்தா பாட்டியின் சமாதி உள்ளது. மேற்படி சொத்தில் கல்லறை இருப்பதை காட்ட நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளனோ என்றால் சாட்சி அமைதியாக உள்ளார். 1ம் பிரதிவாதி 16.06.2009 ல் அவருக்கு பாத்தியப்பட்ட 5 செண்ட் சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் இரண்டாம் பிரதிவாதி பட்டா பெற்று வரி செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

9. 2ம் பிரதிவாதி தாவா சொத்தை 3 ஆம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றாலும் அதன் அடிப்படையில் 3ம் பிரதிவாதி சொத்தை கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார் என்றாலும் சரிதான். 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு தாவா சர்வே எண்ணில் 3.5 செண்ட் சொத்தை செட்டில்மெண்ட் கொடுத்து அதை அவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, அது என்னுடைய சொத்தாகும் அதை அவர் உரிமைமாற்றம் செய்து உரிமை கொண்டாடுகிறார். வழக்கு பட்டிகை சொத்தில் வடமேற்கு மூலையில் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட குடும்ப கோவில் உள்ளது என்றால் சரியல்ல. நான் கோவில் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் குறிப்பிட்டவாறு வாய்மொழி பாகம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

10. வழக்கு பட்டிகை சொத்துக்களை நான் தவறுதலாக குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி அவருக்கு சொந்தமான சொத்தில் காம்பவுண்டு சுவர் கட்டியுள்ளார் என்றால் எனது சொத்தில் எதுவும் கிடையாது. வழக்கு பட்டிகை சொத்துக்கள் தனிதனி கண்டங்களாக தனிதனி நபர்கள் அனுபவதில் உள்ளது என்றாலும் அதனால் தான் நான் நீதிமன்ற ஆணையரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எனது அப்பா எனக்கு எழுதியதாக குறிப்பிட்டுள்ள 1994 ஆவணம் மோசடி ஆவணம் என்றாலும் மேற்படி ஆவணம் எனது அப்பாவால் எந்த உரிமையும் உடைமையும் இல்லாமல் கைவசம் இல்லாமல் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. நான் பிராதில் குறிப்பிட்டுள்ள 14.01.1999 தேதியிட்ட ஆவணம் மோசடியானது என்றாலும் மேற்படி ஆவணத்தில் உள்ள அ பட்டிகை 3 வது இன சொத்தும் பி, சி பட்டிகை சொத்துக்களும் மோசடியாக சேர்க்கப்பட்டுளளது என்றால் சரியல்ல.

11. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் எனது பெயரில் உள்ள இடத்தை எனக்கு மீட்டு தரவேண்டுமென கேட்டுள்ளேன். பிரதிவாதிகளின் ஆவணம் உண்மையான ஆவணம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பாகப்பத்திரபடி எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை 3ம் வாதி கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை உண்மையை மறைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் இந்த வழக்கை பிரதிவாதிகளை கஷ்டப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனவே எனது வழக்கு பிரதிவாதிகள் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**